பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 12 2025 12 40

திங்கட்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜோர்டான், எத்தியோப்பியா மற்றும் ஓமன் நாடுகளுக்கு மூன்றுநாள் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றார்.

2. காங்கிரஸ் கட்சியினர் பிரதமருக்கு எதிராக நேற்று நடத்திய போராட்டத்தின் போது தெரிவித்த கருத்துக்களால் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்று பாதிக்கப்பட்டன.

3. சர்தார் வல்லபாய் பட்டேலின் 75 ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதையொட்டி, தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

4. மத்திய தகவல் ஆணையராக திரு ராஜ்குமார் கோயல் இன்று பதவியேற்றார்.

5. உலகக் கோப்பை ஸ்குவாஷ் சாம்பியன் பட்டத்தை வென்ற இந்திய அணியினருக்கு பிரதமர். உள்துறை அமைச்சர் ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்

--- இனி விரிவான செய்திகள் ---

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜோர்டான், எத்தியோப்பியா மற்றும் ஓமன் நாடுகளுக்கு மூன்றுநாள் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றார்.

தமது பயணத்திற்கு முன் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜோர்டானில் அந்நாட்டு அரசர் அப்துல்லா பின் அல்-ஹுசைனுடன், பிரதமர் Jafar Hassan-னுடனும் இருநாட்டு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஜோர்டான் தலைநகர் Amman-ல் இந்திய சமூகத்தினரிடம் திரு. நரேந்திர மோடி கலந்துரையாடவுள்ளார்.

இந்தியா – ஜோர்டான் இடையே தூதரக உறவுகள் தொடங்கி, 75வது ஆண்டு விழா கொண்டாட்ட நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொள்கிறார்.

ஜோர்டானிலிருந்து திரு. நரேந்திர மோடி, நாளை காலை எத்தியோப்பியா தலைநகர் Addis Ababa செல்கிறார்.

அங்கு பிரதமர் Dr. Abiy Ahmed Ali-யை சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேசவுள்ள அவர், அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் உரையாற்றவுள்ளார்.

நாளை மறுநாள் பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஓமன் தலைநகர் மஸ்கட் செல்கிறார்.

இந்தியா – ஓமன் இடையே தூதரக உறவுகள் தொடங்கி 70 ஆண்டுகள் நிறைவடைவதை கொண்டாடும் வகையில், ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கிறார்.

மஸ்கட்டில், ஓமன் சுல்தான் Haitham-முடன் ஆலோசனை மேற்கொள்ளும் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டில் உள்ள இந்தியர்களுடனும் கலந்துரையாடுகிறார்.

>>><><><><<<

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எதிராக காங்கிரஸ் கட்சியினர் தெரிவித்த கருத்துக்களுக்கு அக்கட்சியின் தலைமை மன்னிப்புக் கோர வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் இருஅவைகளின் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

மக்களவையில், இன்று காலை அவை நடவடிக்கைகள் தொடங்கியதும், நேற்றைய ஆர்ப்பாட்டத்தின்போது காங்கிரஸ் கட்சியினர் பிரதமருக்கு எதிராக கூறிய அவதூறு கருத்துக்களுக்கு கண்டனம் தெரிவிப்பதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறினார்.

இந்தக் கருத்துக்களை நாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்று அவர் தெரிவித்தார்.

காங்கிரசின் செயல்பாடு துரதிருஷ்டவசமானது என்றும், தலைகுனிவை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் அவை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் காங்கிரஸ் கட்சி தெரிவித்த கருத்துக்களை திரும்பப்பெறவேண்டும் என்று வலியுறுத்தி தேசிய ஜனநாயக கூட்டணி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி ஆகியோர் மன்னிப்புக் கோர வேண்டும் என்று அவை முன்னவர் திரு ஜெ பி நட்டா வலியறுத்தினார்.

காங்கிரஸ் கூறிய ஆட்சேபகரமான கருத்துக்கள் அக்கட்சியின் சிந்தனையையும் மனப்போக்கையும் வெளிப்படுத்துவதாக திரு நட்டா கூறினார்.

மாநிலங்களவையில் தொடர்ந்து அமளி நீடித்ததால் அவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியதும் கேள்விநேரத்தின் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அவை நடவடிக்கைகளை உறுப்பினர்கள்

அனுமதிக்க வேண்டும் என்று மாநிலங்களவைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, தற்போது கேள்வி நேரம் நடைபெற்று வருகிறது.

>>><><><><<<

சர்தார் வல்லபாய் பட்டேலின் 75 ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டில் சுதந்திரத்திற்கு பிறகு குறுநில அரசுகளை ஒருங்கிணைத்து ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கியவர் பட்டேல் என்று கூறியுள்ளார்.

ஒரேபாரதம்-உன்னத பாரதம் என்ற அவரின் வழிகாட்டுதல் நாட்டின் வளர்ச்சிப் பயணத்திற்கு இன்றும் உதவிடுவதாக திரு ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு மரியாதை செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்திற்குப் பிறகு, நாட்டை ஒருங்கிணைப்பதில், சர்தார் பட்டேலின் பங்களிப்பை மக்கள் பெருமையுடன் நினைவுகூருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், சுதந்திர இந்தியாவின் முதலாவது உள்துறை அமைச்சராக பதவி வகித்த சர்தார் பட்டேல், நாட்டை ஒருங்கிணைக்க அரும்பாடுபட்டதாக கூறியுள்ளார்.

சர்தார் பட்டேல், கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தி, மகளிர் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியவர் என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

>>><><><><<<

'Assam Tribune' பத்திரிகை ஆசிரியர் Prafulla Govinda Baruah-வின் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஊடகத்துறையில் Baruah-வின் பங்களிப்பை நினைவுகூருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அஸ்ஸாம் மாநிலத்தின் வளர்ச்சிக்கும், அம்மாநில கலாச்சாரத்தை பிரபலப்படுத்துவதிலும், Baruah-வின் பங்கு இன்றியமையாதது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>><><><<<

ஆஸ்திரேலியாவின் Bondi கடற்கரைப் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாக வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் Penny Wong-குடன் தொலைபேசி மூலம் உரையாடியதாகவும், அந்நாட்டிற்கு முழுஆதரவு அளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>><><><<<

மத்திய தகவல் ஆணையராக திரு ராஜ்குமார் கோயல் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

>>><><><<<

கொடைக்கானல் மலைப் பகுதியில் கடுமையான பனிப்பொழிவு நிலவுகிறது.

புல்வெளிகளில் பனிப்படர்ந்து காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – ராஜசேகர் – 39 செகண்ட்ஸ்)

>>><><><<<

ஆப்பிரிக்க நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாக எத்தியோப்பியா நாட்டில் உள்ள இந்திய தூதர் திரு அனில்குமார் ராய் தெரிவித்துள்ளார்.

ஆகாஷ்வாணி செய்திப் பிரிவுக்கு பேட்டியளித்த அவர், இ-ஆப்பிரிக்கா தகவல் தொடர்பு கட்டமைப்பையும், மின்னணு மருத்துவ சேவைகளையும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்தியா வழங்கி வருவதாக தெரிவித்தார்.

ஆப்பிரிக்க நாடுகளுக்கு உலகளவில் அங்கீகாரம் கிடைத்து வருவதாக கூறிய அவர், உலகின் பல நாடுகளும் இங்கு முதலீடு செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திரு அனில்குமார் ராய் குறிப்பிட்டார்.

>>><><><><<<

அருணாச்சலப்பிரதேசத்தில் உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை 4 மணிவரை நடைபெறும் என்று அம்மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப்பிரதேசத்தில் 245 ஜில்லா பரிஷத்துகளுக்கும், 8 ஆயிரத்து 182 கிராம பஞ்சாயத்துகளுக்கும், உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுகிறது.

இதில் 59 ஜில்லா பரிஷத் மற்றும் 5 ஆயிரத்து 857 கிராம பஞ்சாயத்துகளுக்கும் வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

>>><><><><<<

உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டியில், சாம்பியன் பட்டத்தை வென்ற இந்திய அணியினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி. உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பிரதமர் அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்கு, ஜோஷ்னா சின்னப்பா, அபெய் சிங், வேலவன் செந்தில்குமார், அனகத் சிங் ஆகியோரின் திறமையே காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நாட்டில் இந்திய ஸ்குவாஷ் அணியினர் பிரகாசமான சரித்திரத்தை படைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் அவர்களின் திறமையான வெளிப்பாடு இளம் வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**>>><><><><<<**

தெலங்கானா மற்றும் கர்நாடக மாநிலத்தின் உட்பகுதிகளில் ஆங்காங்கே கடும் குளிர் நிலவக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, சண்டிகர், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், உத்தரப்பிரதேசம், கிழக்கு மத்தியப்பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் நாளை வரை பனிப்பொழிவு இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகளில் இடிமின்னலுடன் மழை மற்றும் சூறைக்காற்று வீசக்கூடும் என்றும், வானிலை அறிக்கை கூறுகிறது.

>>> End of News <<<